இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –18.01.2017

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29° செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 26°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 2°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். குளிர்ந்த வறண்ட வானிலை நிலவுகிறது. 21 மற்றும் 22.01.2017 தேதிகளில் மட்டும் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ கடந்த 4 வார வறண்ட வானிலை காரணமாகவும் நீர்ப்பற்றாக்குறை உள்ள இடங்களிலும் இறவை பயிர்களில் இளஞ்சிவப்பு நிற பாக்டீரியாவை (PPFM) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5மில்லி அளவில் காலை வேளையில் தெளிக்கவும். பயிர் கழிவு மூடாக்கு செய்யவும்.
- ✓ நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் நவரை பருவ நெல் நடவினை நீர் மறைய நீர்கட்டு முறையுடன் மேற்கொள்ளவும்.
- ✓ வரும் நாட்களில் தூறல் மழை மட்டும் பெற வாய்ப்பு உள்ளதால் இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 27°செ முதல் 32°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 18°செமுதல் 23°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 48 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாககாற்றின் வேகம் 3 முதல் 19 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ➢ அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த சம்பா நெல் வயல்களில் மெழுகு பதத்தில் நெல் தரிசாக உளுந்து மற்றும் பச்சைபயிறு விதைப்பதற்கு ஏற்ற தருணம். உளுந்து ஆடுதுறை 3 மற்றும் பச்சைபயிறு ஆடுதுறை 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள்.

- தாளடி நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த கார்பென்டெசிம் 200 கிராம் / ஏக்கர் அல்லது டிரைசைக்ளோசோல் 200 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- தாளடி நெற்பயிரில் பழுப்பு நிற இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த கார்பன்டெசிம் 200 கிராம் / ஏக்கர் அல்லது மேங்கோசெப் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### 3.தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலையானது 28°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 முதல் 94 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 17 கி.மீ வேகத்தில்வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையில் பருத்தியில் தண்டுக்கூன் வண்டின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3G @ 33.3 கிலோ/ எக்டர் என்ற அளவில் இடவும்.
- மிளகாயில் காய் பிடித்தலை ஊக்குவிக்க என்.ஏ.ஏ. 10 மி.கி. / லிட்டர் நட்ட 60 மற்றும் 90வது நாளில் மாலை வேளைகளில் தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையில் முதிர்ச்சியடைந்த சோளத்தை அறுவடை செய்யவும். அறுவடை செய்தவுடன் வயலை உழவு செய்வதன்மூலம் தண்டுத்துளைப்பானின் கூட்டுப்புழுக்களையும் களைகளையும் அழிக்கலாம்.
- தற்பொழுது நிலவும் வானிலையில் முதிர்ச்சியடைந்த மக்காச்சோள கதிர்களை அறுவடை செய்து வெயிலில் உலர்த்தி கதிர் அடிக்கும் இயந்திரத்தை கொண்டு மணிகளை பிரிக்கவும் அல்லது கம்பைன் அறுவடை இயந்திரத்தை பயன்படுத்தி அறுவடை செய்யவும். மணிகளை தூற்றி சணல் பையில் சேமிக்கவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி,புதுக்கோட்டை, திண்டுக்கல்,இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 24°செ, மற்ற மாவட்டங்களில் 28°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 17°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 19°செ முதல் 22°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 48 முதல் 85 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 10 முதல் 19 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவி வரும் வறட்சியான சூழ்நிலையில் எதிர்கொள்ளும் இக்கட்டான வளர்ச்சி பருவத்தில் வறட்சியின் பிடியில் இருந்து பயிர்களை காக்கவும் ஒரு சதவீத பொட்டாசியம் குளோரைடு தெளிக்கவும். மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பி.பி.எப்.எம். நுண்ணுயிர் திரவத்தினை ஒரு சதவீதம் என்ற அளவில் தெளித்து அனைத்து பயிர்களிலும் ஈரப்பதத்தினை தக்கவைத்துக் கொள்ளலாம்.
- வெண்டையில் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கந்தகத்தூள் 10 கிலோ அல்லது நனையும் கந்தகம் லிட்டருக்கு 2 கி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம் என்ற விகிதத்தில் தெளிக்கவும்.
- தற்போது நிலவிவரும் பருவநிலை மாற்றத்தில் கறவை மாடுகளில் குடிநீர் அளிப்பது மிக முக்கியமானாதாகும். சுாதரணமாக நன்கு வளர்ச்சியடைந்த பசுவிற்கு ஒரு நாளைக்கு சுமார் 75-80 லிட்டர் சுத்தமான தண்ணீர் அளிக்கவேண்டும், மேலும் பால்கொடுக்கும் மாடுகளுக்கு ஒவ்வொரு லிட்டர் பாலுக்கும் கூடுதலாக 21/2 லிட்டர் தண்ணீர் அளிப்பது அவசியமாகும்.
- தற்போது நிலவிவரும் பருவநிலை மாற்றத்தின் காரணமாக நிலக்கடலையில் பரவலாக சிவப்பு கம்பளிப்புழுக்களின் நடமாட்டம் தென்படுகிறது. சிவப்பு கம்பளிப்புழுக்களை மின்சார வசதி உள்ள இடங்களில் விளக்குப்பொறியை மாலை 7 மணி முதல் 10 மணி வரை எரியவிட்டு வெண்ணிற அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். பயிரில் இலையினடியில் முத்துப்போன்று குவியலாக இருக்கும் முட்டைக்குவியல்களையும் கண்ணாடி போன்று சுரண்டப்பட்ட இலைகளில் கூட்டமாகக் காணப்படும். இளம் புழுக்களையும் இலையோடு கிள்ளி எடுத்து அழிக்கலாம். இளம் புழுக்களை ஃபாஸலோன் 35 இசி மருந்து 300 மி.லி. / ஏக்கர் (அ) டைக்குளோர்வாஸ் 76 இசி 250 மி.லி. ஏக்கர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 18°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 4°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- பயிர் தேவைக்கேற்ப நீர் பாய்ச்ச வேண்டும். மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாக்க, மூடாக்கு இடுவீர்.
- குறைந்த வெப்பநிலை காரணமாக பயிர்களை பனியின் சேதத்திலிருந்து பாதுகாக்க நிலப்போர்வை முறையை மற்கொள்ளவும்.
- நிரந்தர வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ள தோட்டங்களில், மரங்களின் வேர்பகுதியில், ஜனவரி மாதத்தில் மண்ணில் ஆழமாக கொத்தி விட வேண்டும்.

- செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
- இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கமலா ஆரஞ்சு மரங்களுக்கு, ஜனவரி மாதம் 4 கிலோ டோலமைட் மண்ணில் இட்டு கிளரி விட வேண்டும்.
- காபி செடியில் செதில் பூச்சியை கட்டுப்படுத்த, வேப்ப எண்ணெய் அல்லது குயிணால்பாஸ் 25% மருந்தை 2.5 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளிக்கவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். பகல்நேர வெப்பநிலை 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- கோழிகளில் தீவன எடுப்பு மற்றும் முட்டை உற்பத்தி இயல்பை ஒட்டியே நிலவும். எனினும் முட்டை உடைவினைத் தடுக்கும் வகையில், தொடாந்து தீவனத்தில் வைட்டமின்டூடி3யினை 5 முதல் 10% வரை அதிகமாக கொடுத்துவர வேண்டும்.
- தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள சின்ன வெங்காயப் பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளர 200 லிட்டர் தண்ணீரில் 200 மிலி பி,பி,எப்,எம்,(PPFM) என்ற மீதைலோ பாக்டீரியா திரவக்கரைலை கலந்து தெளிப்பு செய்வது அவசியம்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. . காற்று மணிக்கு 5 முதல் 8 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- உழவர்கள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுக்களின் பெருக்கத்தை தடுக்கலாம்.

- செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
- உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால் கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- நெற்பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.
- நெற்பயிரில் இலை வழி ஊட்டமாக 1% யூரியா  0.5 % ஜின்க்சல்பேட் (ஹெக்டருக்கு 5 கிலோ யூரியா 2.5 கிலோ ஜின்க்சல்பேட்டை 500 லிட்டர் தண்ணீருடன் கலக்கவும்) தெளிப்பதன் மூலம் பயிர் வளர்ச்சியை ஊக்கப்படுத்தலாம்.

## 7.அதிக மழை பெறும் மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 65 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 13 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண் அறிவுரை

- மிளகின் தார்களில் ஓரிரு மணிகள் சிவப்பு நிறம் அடைந்துவிட்டால் அவற்றை அறுவடை செய்ய வேண்டும்.
- தற்போது நடவு செய்த பழக் கன்றுகளுக்கும் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.
- நீர் வசதியுள்ள தோட்டங்களில் மரவாசனை செடிகளுக்கு இயற்கை உரங்களை இடவும்.
- தென்னை மரத்தின் 1.8 மீ சுற்றளவில் 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார் கழிவுகளை இடவும்.
- காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு சவுக்கு / மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**